# श्री वैद्यनाथाष्टकम्

# ஸ்ரீ வைத்யநாத அஷ்டகம்

# Shri Vaidyanatha Ashtakam

தமிழ் கவிதை வடிவில்...

பி. ஸ்ரீதேவிபிரசாத்

psdprasad.music@gmail.com

www.paattufactory.com

மார்ச் - 2020

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

## ஸ்ரீ வைத்யநாத அஷ்டகம்

ஸ்ரீ ஆதி சங்கரர் நமக்களித்த பொக்கிஷம். குழந்தைகள் ரைம்ஸ் போல், மொழி அறியாதோர்க்கும் புரியும் படி அமைந்த எளிய சமஸ்கிருத ஸ்தோத்திரம். தமிழ் பொருள் அறிய விரும்புவோர்க்கு ஏதுவாக, இங்கே எளிய தமிழ் நடையில்....நல்ல பலன் கிடைக்க சமஸ்கிருதத்திலேயே சொல்லவும்....

ஸ்ரீ வைத்யநாதனின் அருளாலே சகல நோய்களிலிருந்து நிவாரணமும், சகல சௌபாக்கியமும் கிடைக்கும்..

அந்தஎட்டு ஸ்லோகங்களும், அதற்கான பொருள், தமிழ் கவிதை நடையிலும் இந்நூலில் பதிவுசெய்கிறேன்.

நம:சிவாய ! வணக்கங்களுடன்....

பி.ஸ்ரீதேவிபிரசாத்

www.paattufactory.com



(1)

श्रीराम सौमित्रि जटायुवेद-

षडाननादित्य कुजार्चिताय ।

श्री नीलकण्ठाय दयामयाय

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ १ ॥

ஸ்ரீராமஸௌமித்ரிஜடாயுவேத³ ஷடா³நநாதி³த்ய குஜார்சிதாய ।

ஸ்ரீநீலகண்டா²ய த³யாமயாய ஸ்ரீவைத்³யநாதா²ய நம:ஶிவாய ॥ 1॥

ஸ்ரீராமன், ஜடாயுவும்

நான்மறையும், அறுமுகனும்...

ஸ்ரீகுஜனும், சூரியனும்

பணிந்தேற்றும் பரம்பொருளே !

கருணைமயம் ஆனவனே !

நீலகண்ட அரசிவனே !

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paatufactory.com

(2)

गंगाप्रवाहेन्दु-जटाधराय

त्रिलोचनाय स्मरकालहन्त्रे ।

समस्त देवैरपि पूजिताय

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ २ ॥

க3ங்கா3ப்ரவாஹேந்து3 ஜடாத4ராய த்ரிலோசநாய ஸ்மரகாலஹந்த்ரே।

ஸமஸ்த தே3வைரபி4பூஜிதாய ஶ்ரீவைத்3யநாதா2ய நம: ஶிவாய ॥ 2॥

சடைமுடியில் கங்கையுடன்

பிறைநிலவும் கொண்டவனே !

காமனையும், காலனையும்

கொன்றவனே ! முக்கண்ணா !

தேவரெலாம் தொழுகின்றதேவாதி தேவனே !

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

3)

भक्तप्रियाय त्रिपुरान्तकाय

पिनाकिनॆ दुष्टहराय नित्यम् ।

प्रत्यक्षलीलाय मनुष्यलॊकॆ

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ३ ॥

ப4க்த:ப்ரியாய த்ரிபுராந்தகாய பிநாகிநே து3ஷ்டஹராய நித்யம் ।

ப்ரத்யக்ஷலீலாய மநுஷ்யலோகே ஸ்ரீவைத்3யநாதா2ய நம: ஶிவாய ॥ 3॥

திரிசூலம் கொண்டவனே !

திரிபுரத்தை எரித்தவனே !

அடியார்கள் அன்பிற்கு

அடிமையென நிற்பவனே !

அடிபணியா தீயோரை

அனுதினமும் அழிப்போனே !

புவியுலகில் தீராத

விளையாடல் செய்வோனே !

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

4)

प्रभूतवातादि समस्त रोग-

प्रणाशकर्त्रे मुनिवन्दिताय ।

प्रभाकरेन्द्वग्निविलोचनाय

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ४ ॥

ப்ரபூ$^4$தவாதாதி$^3$ ஸமஸ்தரோக$^3$ ப்ரநாஶகர்த்ரே முநிவந்தி$^3$தாய ।

ப்ரபா$^4$கரேந்த்$^3$வக்$^3$நி விலோசநாய ஶ்ரீவைத்$^3$யநாதா$^2$ய நம: ஶிவாய ॥ 4 ॥

சூரியனும், சந்திரனும்

அக்கினியும் உன்கண்கள் !

வீரியமாய் வருகின்ற

வாதமுடன் பிற பிணிகள்...

தீர்த்தருளும் சிவகுருவே !

மாமுனியோர் பணிபவனே!

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

5)

वाक्श्रोत्रनेत्राङ्घ्रिविहीनजन्तोः

वाक्श्रोत्रनेत्राङ्घ्रिमुखप्रदाय ।

कुष्ठादिसर्वोन्नतरोगहन्त्रे

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ५ ॥

வாக் ஶ்ரோத்ர நேத்ராங்க்⁴ரி விஹீநஜந்தோ:
வாக்ஶ்ரோத்ரநேத்ராங்க்⁴ரிஸுக²ப்ரதா³ய ।

குஷ்டா²தி³ஸர்வோந்நதரோக³ஹந்த்ரே ஶ்ரீவைத்³யநாதா²ய நம:
ஶிவாய ॥ 5॥

வாய்பேச முடியாதோர்
உன்னருளால் பேசிடுவார் !
நோய்வந்து வாடிடுவார்...
உன்னருளால் குணமடைவார் !
பார்வையிலே குறையுடையோர்
உன்னருளால் பார்த்திடுவார் !
கேள்வியிலே குறையுடையோர்
நின்னருளால் நலமடைவார் !
ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

6)

वॆदान्तवॆद्याय जगन्मयाय

यॊगीश्वरध्यॆयपदांबुजाय ।

त्रिमूर्तिरूपाय सहस्रनाम्नॆ

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ६ ॥

வேதா³ந்தவேத்³யாய ஜக³ந்மயாய யோகீ³ஶ்வரத்³யேய பதா³ம்பு³ஜாய ।

த்ரிமூர்திரூபாய ஸஹஸ்ரநாம்நே ஶ்ரீவைத்³யநாதா²ய நம: ஶிவாய ॥
6॥

வேதாந்தம் வழியாக

உணர்வாகும் வேதியனே!

பாதார விந்தங்கள்

பணிவாரே யோகியரே !

ஆயிரம்பேர் கொண்டவனே !

அண்டமெலாம் நிறைந்தவனே !

மும்மூர்த்தி வடிவினனே ! மூவுலக ஆண்டவனே !

ஸ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

7)

स्वतीर्थ मृत् भस्मभृदंगभाजां

पिशाचदुःखार्तिभयापहाय ।

आत्म स्वरूपाय शरीरभाजां

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ७ ॥

ஸ்வதீர்த²ம்ரு'த்³ப⁴ஸ்மப்⁴ரு'தாங்க³பா⁴ஜாம்
பிஶாசது:³கா²ர்திப⁴யாபஹாய ।

ஆத்மஸ்வரூபாய ஶரீரபா⁴ஜாம் ஶ்ரீவைத்³யநாதா²ய நம: ஶிவாய ॥ 7॥

மனித உரு கொண்டவந்த

  மாமணியே ! பரம்பொருளே !

புனித நீராடியோர்க்கு

  பயம் நீக்கும் உன்னருளே !

திருநீறு தரித்தோரின்

  துன்பங்கள் தீர்ப்போனே !

பெருந்தீய சக்திகளின்

  பிடிமீட்டுக் காப்போனே !

ஶ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

8)

श्री नीलकण्ठाय वृषध्वजाय

स्रग्गन्धभस्माद्यपिशोभिताय ।

सुपुत्र दारादि सुभाग्यदाय

श्री वैद्यनाथाय नमः शिवाय ॥ ८ ॥

ஶ்ரீநீலகண்டா²ய வ்ரு’ஷத்⁴வஜாய ஸ்ரக்க³ந்த⁴
ப⁴ஸ்மாத்³யபி⁴ஶோபி⁴தாய ।

ஸுபுத்ரதா³ராதி³ ஸுபா⁴க்³யதா³ய ஶ்ரீவைத்³யநாதா²ய நம: ஶிவாய ॥
8॥

சந்தனமும், நறுமலரும்

சாம்பலுடன் பூசியதால்

சுந்தரமாய் மணம்வீசும்

சுந்தரனே ! சிவநேசா !

சந்தான பாக்யமுடன்

சௌபாக்யம் தருபவனே !

கொடியினிலே காளையினைக்

கொண்டவனே ! நீலகண்டா !

ஶ்ரீ வைத்யநாதனே ! நம:சிவாய !

www.paattufactory.com

वालाम्बिकेश वैद्येश भवरोगहरेति च।

जपेन्नामत्रयं नित्यं महारोगनिवारणम्॥९॥

வாலாம்பி³கேஶ வைத்³யேஶ ப⁴வரோக³ஹரேதி ச ।

ஜபேந்நாமத்ரயம் நித்யம் மஹாரோக³நிவாரணம் ॥ 9॥

அஷ்டகமாம் இதை தினமும்

இஷ்டமுடன் சொல்லிடுவார்...

கஷ்டமிகும் பிறவிக் கடல்

நிச்சயமாய் தாண்டிடுவார் !

பாலாம்பிகை துணைகொண்ட

பரமசிவன் அருளாலே

தீராதநோய் தீர

பாக்யமெலாம் பெற்றிடுவார் !

***********

www.paattufactory.com